[1992 மார்ச் 19

269—

பாலம் கட்டுதல்.

*6070—திரு. வெ. நடேசன் பால்ராஜ் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வள்ளியூர் பேரூராட்சியைச் சேர்ந்த சண்முகப்புர மக்கள் வள்ளியூருக்கு மழைக்காலத்தில் வந்து செல்ல பாலம் இல்லாத காரணத்தால், கொடுமுடி ஆற்று நீரைக் கடந்துதான் வரவேண்டியிருப்பதால் ஆண்டொன்றுக்கு ஒன்றிரண்டு உயிர்ச் சேதம் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு எஸ் கண்ணப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

விடை

அ) இல்லை.

(ஆ) திட்டம் ஏதும் தற்போது பரிசிலனையில் இல்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தன்னிலை விளக்கம்.

18—3—1992 ஆம் நாளன்று அவையில் தாம் பேசியது குறித்து வருவாய்த் துறை அமைச்சரின் விளக்கம்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய அவை நடவடிக்கையில், தன்னிலை விளக்கம்ஒன்று அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதியளிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேசுகிறபோது, பேச்சு நடையை எழுதுகிறபோது மாறி சில நேரங்களில் போட்டு விடுகிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கிறபோதே, இதய தெய்வம் புரட்சித் தலைவரை ஒழித்துவிட வேண்டுமென்று தான் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு பரம

1992 மார்ச் 19] [திரு. எஸ்.டி. சோமசுந்தரம்]

விரோதியாக இருந்தவர்தான் கருணாநிதி அவர்கள். அப்படிப் பட்ட கருணாநிதியுடன் கூட்டு சேர்ந்துகொண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடைய தலைமை நிலையம் புரட்சித் தலைவர் அவர்கள் பாடுபட்டுசம்பாதித்த அவர் காசில், அவர் பணத்தில் வாங்கி தலைமை கழகம் கொடுக்கப்பட்டது. அதை அபகரிக்க வேண்டுமென்பதற்காக புரட்சித் தலைவருக்கு பரம விரோதியாக இருந்தவரை, புரட்சித் தலைவியை எப்படியும் அரசியலை விட்டு ஓட்டிவிட வேண்டுமென்று நீக்கிவிட வேண்டுமென்று, கொன்றுவிட வேண்டுமென்று, அந்த முயற்சிகளை எப்படி கருணாநிதி எடுத்துக் கொண்டார்களோ அதே முயற்சியைத்தான் அவர்களும் எடுத்துக் கொண்டார்கள். புரட்சித் தலைவர் மீது அன்பு உண்டு, அன்பு உண்டு என்று சொல்லிக்கொண்டு இருக்கிறவர்கள் அந்த புரட்சித் தலைவர் மீது அவரையும் சேர்த்து வஞ்சகத்தில் தலைமைக் கழகத்துக்கு வந்து, நுழைந்து அந்தக் கட்டிடத்தை அபகரித்து அதை கருணாநிதியிடம் ஒப்படைக்க வந்தார்கள். அங்கே எங்களையெல்லாம் அடித்தார்கள் போனார்கள் என்று நான் சொல்கிறபோது ஏதோ நான்தான் காப்பாற்றினேன் என்று சொல்கிறபோது, கிராமப்புறத்தில் வஞ்சப் புகழ்ச்சி என்று சொல்வார்கள், ஆகா, உங்கள் பெருந்தன்மையை நான் பாராட்டுகிறேன் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட பெருந்தன்மையை நான் பாராட்டுகிறேன் என்று நான் சொன்னதை செய்தித் தாள்களில் திருநாவுக்கரசு அவர்களை நான் பாராட்டியதாகப் போட்டிருக்கிறார்கள். அவருடைய பெருந்தன்மையை நான் பாராட்டுகிறேன் என்று சொல்வதை, குண்டர்களை எல்லாம் அழைத்துக்கொண்டு வந்து, அதுவும் புரட்சித் தலைவருக்கு விரோதமாக இருக்கிற கருணாநிதியை கூட்டு சேர்த்துக்கொண்டு நீங்கள் செய்தீர்களே, அதற்காக உங்களுடைய பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன் என்று சொன்னால், உண்மையிலேயே அது வஞ்சப் புகழ்ச்சியாகச் சொன்னதுதான். அப்படியில்லாமல் பாராட்டுவதாக பேப்பரில் போட்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவருக்கு பரம விரோதியாக இருந்த கருணாநிதியோடு கூட்டு சேர்ந்தவர்களை நான் எப்படிப் பாராட்டுவேன்? அண்ணாவைச் சேர்ந்தவர்கள் யாரும் பாராட்ட மாட்டோம், புரட்சித் தலைவரை இதய தெய்வமாகக் கொண்டிருக்கிற யாரும் பாராட்ட மாட்டோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரே, நான் வஞ்சப் புகழ்ச்சியாகத்தான் பாராட்டினேன் என்று குறிப்பிட்டிருக்கிறார். இது நேற்றே முடிந்துபோன விவகாரம். நான் சொல்லவில்லை என்று சொன்னால் நீங்கள் கேட்கலாம், (குறுக்கீடு) இதிலே No debate.

[1992 மார்ச் 19

(குறுக்கீடு) அவர் அளித்த தன்னிலை விளக்கத்தில் 'டிபேட்' தேவையில்லை. அதாவது நேற்று இப்படிச் சொன்னதை இப் போது வஞ்சப் புகழ்ச்சியாகத்தான் சொன்னேன் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே இதிலே விவாதம் வேண்டாம். (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : அப்படி அந்த அறிக்கை விட வேண்டிய நெருக்கடி என்ன? (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிக்கையில் பாராட்டியதாக வந்திருக்கிறது. நான் வஞ்சப் புகழ்ச்சி யாகச் சொன்னேன் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதற்கு எந்த விதமான நெருக்கடியும் வரவில்லை, நாட்டிலுள்ள பொது மக்களுக்கு நான் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேற்கொண்டு விவாதம் வேண்டாம், குறுக்கீடு தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். விளக்கம் வேண்டாம்.

3. கவன ஈர்ப்பு.

(அ) வால்பாறை மலைப் பகுதியில் சிறுத்தைப் புலியின் தாக்குதலால் தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் மத்தியில் ஏற் பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் அ. ஸ்ரீதரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் அ, ஸ்ரீதரன்,

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப்பகுதியில் புலிகளின் அட்ட காசத்தால் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப் பட்டு, முந்தாநாள் ஒரு பள்ளி மாணவன் இறந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே இருப்பதை அப்படியே படிக்க வேண்டும்,